

## ஆண்டவரின் செபம்

பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக.
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை
இன்று எங்களுக்குத் தாரும்:
எங்களுக்குத் தீமை
செய்தவர்களை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும்.
எங்களைச் சோதனையில்
விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை
இரட்சித்தருளும்.

# மன்றாட்டுக்கள்

விண்ணக வல்லமை கடவுளின் அரியணைமுன் அவருக்கு பணிவிடை புரிய நிற்கின்றது. நாம் மண்ணகத்தில் நம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தயாராகும்படி அவரிடம் மன்றாடுவோம்.

**எல்: விண்ணகத் தூதர் அணிகளுடன் சேர்ந்து நாமும் நம் தந்தையைப் புகழ்வோம்.**

ஆண்டவரே, உமது வார்த்தையின் பணியாளர்களாக வானத்தூதர்களை ஏற்படுத்தினீர்:- அவர்களுடைய துணையுடன் எம் சகோதரர் சகோதரிகளுக்கு உமது வார்த்தையை எடுத்துச் செல்வோமாக.

ஆண்டவரே, என்றுமுள்ள விண்ணகத் தூதர் அணிகள் உமது புனிதத்தைப் போற்றுகின்றனர்:- மண்ணகத்தில் உமது திருச்சபையும் உமது புகழைத் தவறாது பாடுவதாக.

உமது அடியார்களைப் பாதுகாத்திட உம் விண்ணகத் தூதர்களை அனுப்பினீர்:- பயணம் செய்கின்ற அனைவரையும் பாதுகாத்து, அவர்கள் நலமுடன் தங்கள் வீடு திரும்பிட அருள்புரிவீராக.

கிறிஸ்து பிறந்தபோது உம் தூதர்கள் மானிடர்க்கு அமைதியை அறிவித்துப் பாடினர்:- எங்கள் தலைவர்கள், மக்கள் ஆகிய அனைவரின் உள்ளங்களையும் அந்த அமைதிச் செய்தி தூண்டி எழுப்புவதாக.

தூதர்கள் உலகின் நான்கு முனைகளினின்றும் இறந்தோர்களை அழைக்கின்றனர்:- உம் மக்கள் உம் மகிழ்ச்சிக்குள் ஒன்று சேர்வார்களாக.

# இறுதி செபம்

விண்ணகத் தூதரணிகளின் ஆண்டவராகிய கடவுளே! உமது ஞானமிகு பராமரிப்பினால் எங்களை வழிநடத்திப் பாதுகாக்க உம் தூதர்களை அனுப்புகிறீர். நாங்கள் என்றும் அவர்களுடைய அக்கறைமிகு பாதுகாவலைப் பெறவும் விண்ணகத்தில் அவர்களுடைய தோழமையின் மகிழ்வில் பங்கு பெறவும் செய்தருளும். உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில், கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் மகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. ஆமென்.

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Stenoprint Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY

அக்டோபர் 2018

# திருவழிபாட்டின் திருமணிகள்

## தூய காவல் தூதர்கள்

**சங்கீதமாலை**

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...

பாடல்:

## இறையவனே என் வழித்துணை நீயே



இறையவனே என் வழித்துணை நீயே
இறைஞ்சிடும் ஏழையின் வாழ்க
வாழ்க, வாழ்க 2

1. திசைத் தெரியாத மரக்கலம் போல
திரிந்திடும் வாழ்வு உனதொளிக்கான 2
கலங்கரை தீபம் எனக்கு நீயாவாய்
நலம் தரும் வானக உணவென வாராய் 2

2. இக வழியாக அக ஒளியாவாய்
பகைமையை நீக்கி புது உறவாவாய் 2
தகுதியில்லாத எளியனைத் தேடி
எழுந்துள்ளம் வாழ இறைவனே வாராய் 2

3. பழம் பெரும் பாவ மனிதனை நீக்கி
வளம் தரும் ஆதவ மகனுனில் சேர்த்து 2
புது மனுவாக வதிந்திக வாழ்வை
முடித்திட ஆசீர் அருளிட வாராய் 2

**முன்மொழி** 1: ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர் தம் தூதர் சூழ்ந்து நின்று காத்திடுவர்.

## திருப்பாடல்கள் 34: 1–10

ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன்;
அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில்
ஒலிக்கும். ஆண்டவரைப் பற்றி நான்
பெருமையாகப் பேசுவேன்;
எளியோர் இதைக்கேட்டு அக்களிப்பர்.
என்னுடன் இணைந்து ஆண்டவரைப்
பெருமைப்படுத்துங்கள்
அவரது பெயரை ஒருமிக்க நாம்
மேன்மைப்படுத்துவோம்.

ஆண்டவரிடம் நான் வேண்டினேன்.
அவர் எனக்குச் செவிசாய்த்தார்;
அனைத்துவகை அச்சத்தினின்றும்
அவர் என்னை விடுவித்தார்.
அவரை நோக்கிப் பார்த்தோர் மகிழ்ச்சியால்
மிளிர்ந்தனர்; அவர்கள் முகம் அவமானத்திற்கு
உள்ளாகவில்லை.

இந்த ஏழை கூவியழைத்தான்;
ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்;
எல்லா நெருக்கடியினின்றும் அவரை விடுவித்துக்
காத்தார்.
ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை
அவர்தம் தூதர் சூழ்ந்துநின்று காத்திடுவர்.

ஆண்டவர் எத்துணை இனியவர் என்று
சுவைத்துப் பாருங்கள்; அவரிடம் அடைக்கலம்
புகுவோர் பேறுபெற்றோர்.
ஆண்டவரின் தூயோரே, அவருக்கு அஞ்சுங்கள்;
அவருக்கு அஞ்சுவோர்க்கு எக்குறையும் இராது.
சிங்கக் குட்டிகள் உணவின்றிப் பட்டினிக்
கிடப்பினும், ஆண்டவரை நாடுவோர்க்கு
நன்மை ஏதும் குறைபடாது.

### பிதாவுக்கும்...

**முன்மொழி** 1: ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர் தம் தூதர் சூழ்ந்து நின்று காத்திடுவர்.

**முன்மொழி** 2: ஆண்டவர் வாழ்கிறார்; அவர் தம் தூதர்கள் என்னைப் பாதுகாத்து வருகிறார்கள்

## திருப்பாடல்கள் 34: 11–22

பிள்ளைகளே வாரீர்! நான் சொல்வதைக் கேளீர்!
ஆண்டவருக்கு அஞ்சுவதைப்பற்றி நான்
உங்களுக்குக் கற்பிப்பேன். வாழ்வின் இன்பம் காண
உனக்கு விருப்பமா?
வாழ்வின் வளத்தை துய்க்குமாறு நெடுநாள் வாழ
நாட்டமா?

தீமையினின்று உன் நாவைக் காத்திடு.
வஞ்சக மொழியை உன் வாயினின்று விலக்கிடு!
தீமையை விட்டு விலகு; நன்மையை செய்திடு;
அமைதியை நாடிடு; அதை அடைவதிலேயே
கருத்தாய் இரு.

ஆண்டவருடைய கண்கள் நீதிமான்களை
நோக்குகின்றன;
அவர் தம் செவிகள் அவர்களது மன்றாட்டை
கேட்கின்றன.
தீமை செய்வோர்க்கு எதிராய்
ஆண்டவரின் முகம் இருக்கிறது;
அவர்களின் நினைவு உலகிலிருந்து
அவர் அற்றுப்போகச் செய்வார்.

நீதிமான்கள் மன்றாடும்போது,
ஆண்டவர் செவிசாய்க்கின்றார்;
அனைத்து இடுக்கண்களினின்றும்
அவர்களை விடுவிக்கின்றார்.
உடைந்த உள்ளத்தார்க்கு அருகில்
ஆண்டவர் இருக்கின்றார்.
நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்.

நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பலவாகும்;
அவை அனைத்தினின்றும்
ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார்.
அவர்களின் எலும்புகளை எல்லாம்
அவர் பாதுகாக்கின்றார்;
அவற்றுள் ஒன்றும் முறிவுபடாது.

தீயோரை தீவினையே சாகடிக்கும்;
நேர்மையாளரை வெறுப்போர் தண்டனை பெறுவர்.
தம் ஊழியரின் உயிரை ஆண்டவர் மீட்கின்றார்.
அவரிடம் அடைக்கலம் புகும் எவரும்
தண்டனை அடையார்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி** 2: ஆண்டவர் வாழ்கிறார்; அவர் தம் தூதர்கள் என்னைப் பாதுகாத்து வருகிறார்கள்.

**முன்மொழி 3:** விண்ணுலகின் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்; எல்லா உயிரினங்களோடும் சேர்ந்து அவரை மாட்சிப்படுத்துங்கள்; ஏனெனில், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.

## சிறுபாடல் திருவெளிப்பாடு 11:17–18, 12:10–12

கடவுளாகிய ஆண்டவரே, எல்லாம் வல்லவரே,
இருக்கின்றவரும் இருந்தவருமான உமக்கு நன்றி செலுத்துகின்றோம்;
ஏனெனில் நீர் உமது பெரும் வல்லமையை வெளிப்படுத்தி
ஆட்சி செலுத்தலானீர்.

வேற்றினத்தார் சினந்தெழுந்தனர். உமது சினமும் வெளிப்பட்டது.
இறந்தோருக்கு தீர்ப்பளிக்கவும் உம் பணியாளர்களாகிய
இறைவாக்கினர்கள், இறைமக்கள், உமக்கு அஞ்சும் சிறியோர்,
பெரியோர் ஆகிய அனைவருக்கும் கைம்மாறு அளிக்கவும்
உலகை அழிப்பவர்களை அழிக்கவும் காலம் வந்துவிட்டது.

இதோ, மீட்பு வல்லமை, நம் கடவுளின் ஆட்சி, அவருடைய
மெசியாவின் அதிகாரம் ஆகிய அனைத்தும் வந்துவிட்டன.
நம் சகோதரர் சகோதரிகள்மீது குற்றம் சுமத்தியவன், நம் கடவுள் திருமுன்
அல்லும் பகலும் அவர்கள் மீது குற்றம் சாட்டியவன் வெளியே
தள்ளப்பட்டான்.

ஆட்டுக்குட்டி சிந்திய இரத்தத்தாலும் தாங்கள் பகர்ந்த சான்றாலும்
அவர்கள் அவனை வென்றார்கள். அவர்கள் தங்கள் உயிர்மீது ஆசை
வைக்கவில்லை; இறக்கவும் தயங்கவில்லை.
இதன் பொருட்டு விண்ணுலகே, அதில் குடியிருப்போரே,
மகிழ்ந்து கொண்டாடுங்கள்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி :** விண்ணுலகின் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்; எல்லா உயிரினங்களோடும் சேர்ந்து அவரை மாட்சிப்படுத்துங்கள்; ஏனெனில், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.

## அருள்வாக்கு திருவெளிப்பாடு 8: 3-4

மற்றொரு வானதூதர் பொன் தூபக்கிண்ணம் ஏந்தியவராய் பலிபீடத்தின் அருகில் வந்து நின்றார். அரியணைமுன் இருந்த பொன் பலிபீடத்தின்மீது இறைமக்கள் அனைவரும் செய்த வேண்டுதல்களோடு படைக்குமாறு அவருக்கு மிகுதியான சாம்பிராணி வழங்கப்பட்டது. அச்சாம்பிராணி புகை இறைமக்களின் வேண்டுதல்களோடு சேர்ந்து வானதூதரின் கையிலிருந்து கடவுள் திருமுன் எழும்பிச் சென்றது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சிறு மறுமொழி

முதல்: கடவுள் உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார்.
எல்: கடவுள் உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார்.
முதல்: நீர் செல்லும் இடமெல்லாம் உம்மை அவர்கள் காப்பார்கள்.
எல்: கடவுள் உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார்.
முதல்: தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.
எல்: கடவுள் உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார்.

## கன்னிமரியின் பாடல்



**முன்மொழி:** தூதர்கள் விண்ணுலகில் உள்ள என் தந்தையின் முகத்தை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

### பிதாவுக்கும்...

---

**முன்மொழி:** தூதர்கள் விண்ணுலகில் உள்ள என் தந்தையின் முகத்தை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.